

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 25-11-2025

# உழவர்க்கும் உணவுக்கும் துரோகம்!

உழவர்க்கு மட்டுமல்ல; மக்கள் உண்ணும் உணவுக்கும் சேர்த்து துரோகம் இழைத்துள்ளது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

நெல் கொள்முதலில் ஈரப்பதம் தளர்வு தொடர்பான தமிழ்நாட்டின் கோரிக்கையை நிராகரித்துள்ளது ஒன்றிய பா.ஜ.க. அரசு. கனமழை காரணமாக ஈரப்பதம் அதிகமாகியுள்ள நெல்லைக் கொள்முதல் செய்ய வேண்டும் என்ற தமிழ்நாட்டின் குரல் பிரதமர் மோடியின் காதுகளுக்குக் கேட்கவில்லை. சில நாட்களுக்கு முன்புதான் தமிழ்நாட்டுக்கு வந்தார் பிரதமர் மோடி. உழவர்களை உச்சிமுகர்ந்து பேசினார் பிரதமர். வேளாண்மையை வானளவுக்கு புகழ்ந்தார் பிரதமர். கோவையில் இருந்து டெல்லி சென்றதும் உழவர்கள் தலையில் அவரே மண்ணைப் போட்டுவிட்டார். வேளாண்மையின் வளர்ச்சியை அவரே தடுக்கப் பார்க்கிறார்.

**தமிழ்நாட்டில் குறுவை பருவத்தில் அதிக நெல்உற்பத்தி நடைபெற்றுள்ளது. இதனால் கொள்முதலில் சாதனை படைத்துள்ளது தமிழ்நாடு அரசு. மழை அதிகமாக பெய்து வருவதால் நெல்லின் ஈரப்பதம் அதிகமாகி உள்ளது. விவசாயிகளின் நலன் கருதி நெல் கொள்முதலுக்கான ஈரப்பத அளவை 17 விழுக்காட்டில் இருந்து 22 விழுக்காடாக உயர்த்தி விரைந்து ஆணை வழங்கிட வேண்டும் என்று மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடிதம் ஒன்றை அனுப்பி இருந்தார்கள்.**

அதில் தமிழ்நாட்டின் உணவு உற்பத்தி சாதனைகள் அனைத்தையும் முதலமைச்சர் அவர்கள் பட்டியல் போட்டுச் சொல்லி இருந்தார்கள்.

கடந்த ஆண்டு நெல் கொள்முதல் 4.83 லட்சம் மெட்ரிக் டன். இந்த ஆண்டு 14.11 லட்சம் மெட்ரிக் டன் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இது நெல் கொள்முதலின் மிகப்பெரிய சாதனை ஆகும். இந்த நிலையில் கொள்முதல் இலக்கை ஒன்றிய உணவு மற்றும் பொது விநியோகத்துறை குறைத்துள்ளது. கொள்முதல் செய்யப்படும் மொத்த நெல் அளவுக்கு ஏற்ப இதனை உயர்த்த வேண்டும் என்று முதலமைச்சர் கோரிக்கை வைத்துள்ளார்.

**காவிரி டெல்டா பகுதி மற்றும் பிறமாவட்டங்களில் பெய்துவரும் வடகிழக்குப் பருவமழையைக் கருத்தில் கொண்டு, நெல் கொள்முதலுக்கான ஈரப்பதம் அளவை 17 இல் இருந்து 22 விழுக்காடாக உயர்த்த வேண்டும் என்றும் முதலமைச்சர் கோரி இருந்தார். ஆனால் அதனை ஒன்றிய பா.ஜ.க. அரசு ஒப்புக் கொள்ளவில்லை. ஒன்றிய அரசில் இருந்து இதுவரை மூன்று குழுக்கள் டெல்டா மாவட்டங்களுக்கு வந்து பார்வையிட்டார்கள். அதன் பிறகும் ஒன்றிய அரசின் முடிவில் மாற்றம் இல்லை.**

ஈரப்பத அளவு தளர்வு உத்தரவு கிடைக்காவிட்டால் வேளாண் மக்கள் வெகுவாக பாதிக்கப்படுவார்கள். இதனை எல்லாம் சிந்திக்கும் மனநிலையில் பிரதமரும் இல்லை, ஒன்றிய அரசும் இல்லை என்பதையே அவர்களது செயல்பாடுகள் காட்டுகின்றன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அக்டோபர் 19 ஆம் தேதியன்று பிரதமருக்கு கடிதம் அனுப்பினார். ஒன்றிய அரசின் கடிதம் நவம்பர் 17 வந்துள்ளது. முதலமைச்சர் எழுதிய கடிதத்துக்கு ஒரு மாதம் கழித்து பதில் அனுப்பி இருக்கிறது ஒன்றிய அரசு. ஒரு மாதம் கழித்து ஈரப்பத கோரிக்கைக்கு அனுமதி இல்லை என்று சொல்லி இருக்கிறார்கள். ஈரப்பதம் அதிகமானதற்குக் காரணம், வேளாண் மக்களோ, தமிழ்நாடு அரசோ அல்ல. இயற்கையின் சூழல் அப்படி அமைந்து விட்டது. தென் மேற்கு பருவமழை முடிந்து, வடகிழக்குப் பருவமழை தொடங்கி பெய்து வருகிறது. இதனால் காற்றின் ஈரப்பதம் அதிகமாக இருக்கிறது.

இதனைத்தான் விவசாய சங்கங்களும் சொல்கின்றன. **"ஒன்றிய அரசின் அதிகாரிகள் தமிழ்நாட்டின் பல இடங்களில் ஆய்வு செய்தார்கள். உடனடியாக ஈரப்பதம் விலக்களிப்பதற்கான அறிக்கை தரப்படும் என்று சொன்னார்கள். ஆனால் அதனை ஒன்றிய அரசு செய்யவில்லை. மழையால் பயிர்கள் மோசமாக பாதிக்கப்பட்டு இழப்பை எதிர் நோக்கியுள்ள விவசாயிகளுக்கு குறைந்த பட்சம் ஈரப்பதம் விலக்கைக் கூட அளிக்க மறுப்பது கண்டிக்கத்தக்கது. பிரதமர் கோவைக்கு வந்து, நான் விவசாயிகளின் பாதுகாவலன் என்று பேசிச் சென்றது ஏமாற்றும் செயல்"** என்று விவசாய சங்கங்கள் கொந்தளித்துள்ளன.

கன மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்குக் கோரப்பட்ட நிவாரணமும் அளிக்காமல், ஈரப்பத அளவையும் அதிகரிக்காமல் தமிழ்நாட்டின் டெல்டா விவசாயிகளை வஞ்சித்து வாழ்வாதாரத்தை கேள்விக்குறியாக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்தும், தமிழ்நாட்டின் கோரிக்கைகளை உடனடியாக மறுபரிசீலனை செய்து வேளாண் பெருங்குடி மக்களுக்கு ஒன்றிய அரசு நன்மை செய்திட வேண்டும் என வலியுறுத்தியும் தஞ்சாவூரிலும் திருவாரூரிலும் 'மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி' சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளது. கோவையில் முழங்கிவிட்டு, டெல்லி சென்றுள்ள பிரதமரின் செவிகளில் இக்குரல்கள் விழுமா?

"விவசாயிகளிடையே பிரதமர் உரையாற்றிய ஈரம் காய்வதற்குள் அடுத்த துரோகம்" என்று இதனைத்தான் சொல்கிறார் முதலமைச்சர் அவர்கள்.

**எதற்கெடுத்தாலும் தமிழ்நாடு போராடுகிறது என்று குற்றம் சாட்டுகிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு. அதன் அமைச்சர்கள் அதைத் தான் தி.மு.க. மீது குற்றச்சாட்டாக வைக்கிறார்கள். அனைத்துக்கும் போராட்டம் நடத்தும் சூழலில்தான் தமிழ்நாட்டை ஒன்றிய பா.ஜ.க. அரசு வைத்துள்ளது என்பது தான் முழு உண்மை ஆகும்.**

# திருப்பூர் வடக்கு மாநகர கழக ஆலோசனைக் கூட்டம்!

## மாநகரப் பொறுப்பாளர் ஈ.தங்கராஜ் வேண்டுகோள்!

திருப்பூர், நவ. 25-

திருப்பூர் வடக்கு மாநகர தி.மு.க. பொறுப்பாளர் ஈ.தங்கராஜ் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு :-

திருப்பூர் வடக்கு மாநகரக் கழக ஆலோசனைக் கூட்டம் இன்று (25.11.2025 - செவ்வாய்க்கிழமை) மாலை 5:00 மணியளவில் போயம்பாளையம் சரண் மருத்துவமனை அருகில் அமைந்துள்ள திருப்பூர் வடக்குமாநகரஅலுவலகம், மேயர்சிட்டிபாபு அரங்கில் திருப்பூர் வடக்கு மாநகர கழகப் பொறுப்பாளர் ஈ.தங்கராஜ் ஆகிய எனது தலைமையிலும், திருப்பூர் வடக்கு மாநகர நிர்வாகிகள், பகுதி கழகச் செயலாளர்கள் முன்னிலையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில்திருப்பூர் வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ் குமார், வடக்கு சட்டமன்ற தொகுதி பார்வையாளர் கோ.வெ.குமணன் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்க உள்ளனர்.

அது சமயம் திருப்பூர் வடக்கு மாநகர கழகத்திற்குட்பட்ட வட்டக் கழக செயலாளர்கள், பகுதி, கழக நிர்வாகிகள், மாவட்ட, மாநகர பிரதிநிதிகள், மாவட்ட, மாநகர சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், இந்நாள், முன்னாள் நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள் :**

1. நவம்பர் 27 அன்று இளம் தலைவர், தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர்அணிசெயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்தநாள் நிகழ்வுகள் குறித்து.

2. வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர சீராய்வு (SIR) பணிகள் குறித்து.

3. கழக ஆக்கப் பணிகள் குறித்து.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (24.11.2025) முகாம் அலுவலகத்தில், மூத்த வழக்கறிஞரும், முன்னாள் அரசு தலைமை வழக்கறிஞருமான விடுதலை அவர்கள் தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

## கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 4 தொகுதிகளில்

# வெற்றி இலக்கை நோக்கி கழக நிர்வாகிகள் தீவிரமாக பணியாற்ற வேண்டும்!

## மாவட்டச் செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. அறிக்கை!

கள்ளக்குறிச்சி, நவ. 25 -

கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டச் செயலாளர், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் அனைவருக்கும் அன்பான வணக்கங்கள்,

வரவிருக்கின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில் முதலமைச்சர், கழகத் தலைவர், சமூக நீதி காவலர், திராவிட மாடல் நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் மீண்டும் திராவிட மாடல் அரசு அமைந்திட, கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்குட்பட்ட 4 சட்டமன்றத் தொகுதிகளிலும் தி.மு.க. மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்கள் பெற்ற வெற்றியினை முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கரங்களில் ஒப்படைத்திடும் வகையில் கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் தீவிரமாக பணியாற்றிட வேண்டும்.

அதற்கு அச்சாரமாக, தீவிர வாக்காளர் திருத்தப் பட்டியல் (S.I.R) பணிகளில் கழகத்தினர் தம்மை முழு நேரமும் ஈடுபடுத்தி, கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்குட்பட்ட 4 சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட அனைத்து தகுதியான வாக்காளர்களையும் வாக்காளர் பட்டியலில் இடம்பெற செய்திட வேண்டும்.



மழைக்காலங்களில் ஏற்படும் இயற்கை பேரிடர் குறித்த தகவல்களை உடனடியாக மாவட்டக் கழக அலுவலகத்திற்கு தெரியப்படுத்த வேண்டும்.

மேலும், பேரிடரால் பாதிப்புக்குள்ளாகும் பொது மக்களுக்கு தேவையான உதவிகளை உடனடியாக மேற்கொள்ளும் பணிகளிலும் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். மக்கள் பணியே மகேசன் பணி - எனும் கோட்பாட்டினை மனதில் ஏந்தி, மக்களின் வாக்குரிமை காக்கும் பணிகள், இயற்கை பேரிடரில் இருந்து மக்களை காக்கும் பணிகள் உள்ளிட்ட பணிகளில் கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் அனைவரும் தங்களை முழுநேரமும் ஈடுபடுத்தி உழைத்திட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன் என அறிக்கையில் கூறியிருக்கிறார்.

மேலும், வரவிருக்கின்ற 2026 சட்டமன்றத் தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில், கவனச் சிதறல்கள் ஏதுமின்றி, காலம் பொன் போன்றது என்பதனை மனதில் கொண்டு தேவையற்ற செயல்களுக்கு சமூக வலைதளங்களில் நேரத்தினை விரயம் செய்திடாமல், இருக்கின்ற குறுகிய காலத்தில் நமது இலக்கினை நோக்கி உழைப்பினை செலுத்தி, கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்குட்பட்ட 4 சட்டமன்றத் தொகுதிகளிலும் மகத்தான வெற்றி பெற வேண்டும் என்ற ஒற்றை இலக்கோடு மக்கள் பணியாற்ற வேண்டுமாய் அறிக்கையின் மூலமாக கேட்டுக் கொள்கிறேன்.

## தமிழ்நாட்டில்

# மதுரை, நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் மழை நீடிக்கும்!

## தொடர்மழை காரணமாக முக்கிய அணைகளுக்கு நீர்வரத்து அதிகரிப்பு!

சென்னை, நவ. 25 -

தமிழ்நாட்டில் மதுரை, தூத்துக்குடி, தஞ்சாவூர், திருச்சி உள்ளிட்ட மாவட்டங்களில் பெய்து வரும் தொடர்மழை காரணமாக, அணைகள் உள்ளிட்ட நீர்நிலைகள் வேகமாக நிரம்பி வருகின்றன.

தென் குமரிக்கடல் பகுதியில் நிலைகொண்டுள்ள காற்றழுத்த தாழ்வு பகுதி காரணமாக, தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களான நெல்லை, தென்காசி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி உள்ளிட்ட மாவட்டங்களில் கனமழை பெய்து வருகிறது.

தொடர்மழை காரணமாக அணைகள் உள்ளிட்ட நீர்நிலைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. நெல்லை மாவட்டத்தில் நீடிக்கும் கனமழையால் தாமிபரணி ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஒடுகிறது.

வெள்ளப்பெருக்கு காரணமாக மணிமுத்தாறு, அகஸ்தியர் அருவி, களக்காடு தலையணைக்கு சுற்றுலாப்பயணிகள் செல்ல தடைவிதிக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தின் பிரதான அணைகளான பாபநாசம், சேர்வலாறு அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 8 அடி உயர்ந்துள்ளது. தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் மருதூர் அணையிலிருந்து 19 ஆயிரம் கனஅடி நீர் திறந்து விடப்பட்டுள்ளது.

இதேபோல, கோரம்பள்ளம் குளத்தின் ஐந்து மதகுகள் திறக்கப்பட்டு தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

தென்காசி மாவட்டத்தில் அடவி நயினார் கோவில் நீர்த்தேக்கம், கடனாநதி, கருப்பாநதி, குண்டாறு, ராமநதி உள்ளிட்ட அணைகளில் தண்ணீர் வரத்து தொடர்ந்து அதிகரித்துள்ளது.

குற்றால அருவிகளில் காட்டாற்று வெள்ளம் கரைபுரண்டு ஓடுவதால் சுற்றுலா பயணிகள் குளிக்க விதிக்கப்பட்ட தடை 4வது நாளாக தொடர்கிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில், பேச்சிப்பாறை, பெருஞ்சாணி உள்ளிட்ட அணைகளின் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருகிறது. முன்னெச்சரிக்கையாக, திற்பரப்பு அருவியில் சுற்றுலாப் பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேற்குத் தொடர்ச்சி மலையின் நீர்பிடிப்பு பகுதிகளில் நீடிக்கும் மழையால், முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் 138 அடியை எட்டியது.

இதனால் கேரளாவின் இடுக்கி மாவட்டத்திற்கு தமிழ்நாடு நீர்வளத் துறை சார்பில் வெள்ள அபாய எச்சரிக்கை கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தொடர்மழையால் தேனி மாவட்டம் கம்பம் சுருளி அருவியிலும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. விருதுநகர் மாவட்டம், திருவில்லி புத்தூர் அருகே உள்ள செண்பகத்தோப்பு மீன் வெட்டி பாறை அருவியில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால், சுற்றுலா பயணிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

# தமிழ் படித்த கூட்டம் பெருமிதம் பெறுகிறது!

நேற்று நடந்த நிகழ்வில்
நெகிழ்ந்து போனது நெஞ்சு

ஈரோடு தமிழன்பனின்
இறுதிச் சடங்கில் வழங்கப்பட்ட
காவல்துறை மரியாதை கண்டு
கலங்கி அடங்கியது கண்

பத்மஸ்ரீ இல்லை;
பல்கலைக்கழகத்
துணைவேந்தர் இல்லை;
அரசாட்சியின்
அதிகாரத்தில் இருந்ததில்லை

ஆனாலும்
தமிழோடு வாழ்ந்த
ஒரு புலவனுக்கு
முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்
தந்த மரியாதை
இலக்கிய உலகத்தின்
ஆறாத கண்ணீருக்கு
ஆறுதல் ஆயிற்று

அந்த நெகிழ்ச்சி அடங்குவதற்குள்
அவரோடு பேச ஆசைப்பட்டேன்

பேசினேன்:

"இலக்கியவாதிகளின் சார்பில்
நன்றி என்றேன்;
ஒரு கவிஞனை
கர்வத்தோடும் கௌரவத்தோடும்
அனுப்பி வைத்தீர்கள்" என்றேன்

அவரும் நெகிழ்ந்து போனார்

முரசு கட்டிலில்
உறங்கிய புலவனுக்கு



வெண்சாமரம் வீசிய
வேந்தனின் மரபும்,
தமிழின் வாழ்நாள்
பெருகட்டும் என்று
தமிழ்க் கவிக்குக் கனிகொடுத்த
அரசனின் கனிவும்,
கவிஞர்களுக்கு உயரம்சேர்த்த
கலைஞரின் பரிவும்
தளபதி ஆட்சியில் தொடர்வதுகண்டு
தமிழ்படித்த கூட்டம்
பெருமிதம் பெறுகிறது

அவ்வை நடராசனுக்கு
அரசு மரியாதை
நான் கேட்டேன்; வழங்கினார்

ஈரோடு தமிழன்பனுக்குக்
கேட்கவில்லை;
அவரே வழங்கியிருக்கிறார்

தொடரட்டும்
மாண்புகளும் மரபுகளும்!

கவிப்பேரரசு
**வைரமுத்து**

